Renting
Kukodesha
ایجار
Thuê nhà
کرایه گرفتن
租屋
வாடகைக்கு விடுதல்
Rïop hoot yiic
賃貸
Gupangisha
Kireysi
租房
주택 임차
اجاره

விதிமுறைகளை அறிந்து கொள்ளவும்

நீங்கள் வசித்திருக்கிற மற்ற இடங்களைக் காட்டிலும் வேறுபட்டதாக இருக்கக்கூடிய வாடகைக்கு விடுதல் விதிமுறைகள் குயீன்ஸ்லாண்ட்டில் உள்ளன.

வாடகைக்கு விடும் போது உங்களுக்கு என்று **உரிமைகளும் பொறுப்புகளும்** உள்ளன. அவை யாவை என்று அறிந்துக்கொண்டு பிரச்சினைகளைத் தவிர்க்கவும்.

RTA உங்களுக்கு உதவுவதற்காக இங்கு உள்ளது

வசிப்பிடம்சார் வாடகைக்கு குடியிருத்தல்கள் ஆணையம் (The Residential Tenancies Authority (RTA)) என்பது குயீன்ஸ்லாண்ட்டில் வாடகைக்கு விடுதல் சட்டங்களை மேற்பார்வையிடுகிற ஒரு அரசு முகமை ஆகும். வாடகைக்கு குடியிருப்பவர்கள், வீட்டு உரிமையாளர்கள் மற்றும் ரியல் எஸ்டேட் (real estate) முகவர்கள் ஆகியோருக்கு நாங்கள் உதவி மற்றும் தகவல்களை வழங்குகிறோம்

வாடகைக்கு விடும் போது எழும் பிரச்சினைகள்

நீங்களும் உங்கள் வீட்டு உரிமையாளரும் ஒரு வாடகைக்கு விடுதல் பிரச்சினைக்கு தீர்வு காண்பது எப்படி என்பது குறித்து ஒரு உடன்பாட்டுக்கு வர இயலாத பட்சத்தில், ஒரு தீர்வைக் கண்டறிய உங்களுக்கு உதவிடவே நாங்கள் இங்கு இருக்கிறோம்.

RTA பிரச்சினைகளைத் தீர்க்கும் சேவை ஒன்றை இலவசமாக வழங்குகிறது.

நாங்கள் எவ்வாறு உதவமுடியும் என்பது பற்றி அறிய 1300 366 311 என்ற எண்ணுக்கு எங்களை அழைக்கவும்.

வாடகைக்கு விடுவது பற்றிய மேலும் அதிக தகவல்களைப் பெற

குயீன்ஸ்லாண்ட்டில் வாடகைக்கு விடுதல் பற்றிய விளக்கமான தகவல்களை அறிய rta.qld.gov.au என்ற எங்கள் இணையத்தளத்திற்கு வருகைத் தரவும்.

1300 366 311 என்ற எண்ணில் எங்களை அழைக்கவும். வாடகைக்கு வழங்குதல் பற்றிய உங்கள் வினாக்களுக்கு விடைகளைப் பெறவும். திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 முதல் மாலை 5 வரை நாங்கள் செயல்படுகிறோம்.

உங்கள் மொழியில் பேச

Interpreter

RTA மூலமாக, மொழிபெயர்ப்பு மற்றும் மொழிமாற்ற சேவை (TIS) கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது. நீங்கள் அழைக்கும் போது ஒரு மொழிபெயர்ப்பாளரைப் பெற உதவி வேண்டுமென எங்களிடம் கேளுங்கள் அல்லது நேரடியாகவே 131 450 என்ற எண்ணில் TIS-ஐ அழையுங்கள்

இந்தத் தகவல்கள் பொது வழிகாட்டலுக்கு மட்டுமே ஆகும். இது சட்ட ஆலோசனை அல்ல. வழங்கப்பட்டுள்ள தகவல்களின் துல்லியம் அல்லது முழுமை குறித்து RTA எவ்வித உத்தரவாதமும் அளிக்க இயலாது. மேலும் தகவல் அறிய வசிப்பிடம்சார் வாடகைக்கு குடியிருத்தல்கள் மற்றும் வாடகையிடத்தை பகிர்ந்து வசித்தல் சட்டம் 2008ஐப் பார்க்கவும் (*Residential Tenancies and Rooming Accommodation Act 2008*).

residential tenancies authority

சில பொதுவான வாடகைக்கு விடுதல் விதிமுறைகள்

வாடகைக்கு குடியிருப்பவர்கள்:

- உரிய நேரத்தில் வாடகையை செலுத்தவும்
- வாடகைக்கு குடியிருக்கும் இடத்தை சுத்தமாகவும், நேர்த்தியாகவும் சேதமடையாமலும் வைத்துக் கொள்ளவும்
- உங்கள் வாடகைக்கு குடியிருத்தல் ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடந்து கொள்ளவும்
- உங்கள் அண்டை வீட்டுக்காரர்களின் சமாதானம் மற்றும் அமைதிக்குரிய உரிமையை மதிக்கவும்

வீட்டு உரிமையாளர்கள்:

- வாடகைக்கு குடியிருப்பவர்களின் அந்தரங்கத்தை மதித்து, உள்ளே நுழைவதற்கான தேவைகளுக்கு இணங்கி நடக்கவும்
- பழுதுநீக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும்
- அனைத்து சுகாதார மற்றும் பாதுகாப்பு சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நிறைவேற்றிக் கொடுக்கவும்.
- RTA உடன் பிணைப்பு ஏற்படுத்திக்கொள்ளவும்

CC BY

Tamil

Creating pathways

மேலும் தகவல் அறிய குறியீட்டை ஸ்கேன் (scan) செய்யவும்.